பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
16 06 2025 7 15
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, சைப்ரஸ் பயணத்தைத் தொடர்ந்து இன்று கனடா செல்கிறார்.

2. சிறு தொழில்முனைவோரை மத்திய அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருவதாக நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. மகாராஷ்டிரா மாநிலத்தில் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம் இடிந்து விழுந்ததில் 4 பேர் உயிரிழந்தனர். மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

4. நாட்டின் மேற்கு, வடமேற்கு பகுதிகளில் சில இடங்களில் இன்று அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. அல்டிமேட் டேபிள் டென்னிஸ் போட்டியில் மும்பை அணி பட்டம் வென்றது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

**<<<<>>>>**

அரசுமுறைப் பயணமாக சைப்ரஸ் சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அந்நாட்டு அதிபர் திரு. **Nikos Cristodoulides** உடன் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

கல்வி, மண்டல பாதுகாப்பு, டிஜிட்டல் துறையில் ஒத்துழைப்பு போன்றவை குறித்து இரு தலைவர்களும் விரிவான ஆலோசனை நடத்த உள்ளனர்.

இந்தியா – ஐரோப்பிய யூனியன் ஒத்துழைப்பு, இந்தியா – மத்திய கிழக்கு – ஐரோப்பிய யூனியன் பொருளாதார வழித்தடம் ஆகியவை குறித்தும் இரு தலைவர்களும் பேச்சு நடத்த உள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பிரதமர் சைப்ரஸ் பயணத்தை முடித்துக்கொண்டு கனடா புறப்பட்டுச் செல்கிறார்.

கனடாவில் நடைபெற உள்ள ஜி-7 உச்சிமாநாட்டில் பிரதமர் பங்கேற்க உள்ளார்.

இந்த மாநாட்டுக்கு இடையே பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுகளிலும் பிரதமர் ஈடுபட உள்ளார்.

முன்னதாக பிரதமர் நேற்று லிமாசோலில் நடைபெற்ற வர்த்தக வட்டமேசை கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார்.

இந்தியாவும் – சைப்ரசும் நீண்டகால நல்லுறவைப் பேணி வருவதாக அவர் தெரிவித்தார்.

தொழில்புரிவதற்கான நடைமுறைகள் இந்தியாவில் எளிமைப்படுத்தப்பட்டுள்ளதாக கூறிய பிரதமர், இதனை சைப்ரஸ் முதலீட்டாளர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்தியாவில் டிஜிட்டல் புரட்சி ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

உலகின் மொத்த டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகளில் சுமார் 50 சதவீதம் இந்தியாவில் நடைபெறுவதாக அவர் குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் தொழில்நுட்பங்கள், செமிகண்டக்டர் இயக்கம், முக்கிய கனிமங்கள் இயக்கம், அணுசக்தி இயக்கம் போன்ற முக்கிய முன்முயற்சிகள் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக 100 பில்லியன் டாலர் செலவிடப்படுவதாக அவர் கூறினார்.

அரசின் தெளிவான கொள்கை சீர்திருத்தங்களால் உலகில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது என திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், புதுச்சேரியில் இன்று

பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

இதற்காக நேற்று சென்னை வந்த அவரை விமான நிலையத்தில், தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி வரவேற்றார்.

பின்னர் புதுச்சேரி சென்ற திரு. ஜக்தீப் தங்கரை புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரெங்கசாமி மற்றும் அமைச்சர்கள் வரவேற்றனர்.

இன்று ஜிப்மரில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்கும் அவர், மாணவர்களுடனும் கலந்துரையாடுகிறார்.

திரு. ஜக்தீப் தங்கரின் வருகையை ஒட்டி புதுச்சேரியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் நவீன டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து புதுதில்லியில் அதிகாரிகளுடன் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் நேற்று அவர் பங்கேற்றார்.

பின்னர் இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து இன்று அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படும் என்று கூறியுள்ளார்.

முதல் முறையாக இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பும் நடத்தப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

34 லட்சம் பேர் இந்த கணக்கெடுப்பு பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும், ஒரு லட்சத்து 30 ஆயிரம் அதிகாரிகள் இப்பணிகளை ஒருங்கிணைப்பார்கள் என்றும் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

இதனிடையே மக்கள் தொகை கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடைபெறும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

முதற்கட்டத்தில் ஒவ்வொரு வீடாகச் சென்று தனிநபர் விவரங்கள் சேகரிக்கப்படும் என்றும், இரண்டாவது கட்டத்தில் சமூக, பொருளாதார, கலாச்சார அம்சங்கள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்படும் என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சிறு தொழில்முனைவோரை மத்திய அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருவதாக நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

லடாக்கின் லே பகுதியில் அரசின் கடனுதவிகளை பயனாளிகளுக்கு நேற்று அவர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், லடாக் பகுதியில் 64 ஆயிரம் முத்ரா கடன்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

லடாக்கில் வங்கிக் கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இப்பகுதியில் மின்கட்டமைப்புகள், தகவல் தொடர்பு இணைப்புகள் போன்றவையும் மேம்படுத்தப்பட்டுள்ளதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<>>>>

அஹமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்த குஜராத் முன்னாள் முதலமைச்சர் விஜய் ருபானியின் இறுதிச் சடங்குகள் இன்று நடைபெற உள்ளது.

காந்திநகரில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அம் மாநில அமைச்சர் திரு. ருஷிகேஷ் பாட்டேல், விஜய் ருபானியின் உடலை அவரது உறவினர்கள் இன்று காலை 11.30 மணியளவில் மருத்துவமனையிலிருந்து பெற்றுக் கொள்ளவுள்ளதாக கூறினார்.

இதன்பின்னர் விஜய் ருபானியின் உடல் ராஜ்கோட்டிற்கு விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டு, அங்கு முழுஅரசு மரியாதையுடன் இறுதிச் சடங்குகள் நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

விஜய் ரூபானியின் இறுதிச் சடங்கு இன்று நடைபெற உள்ளதையொட்டி, குஜராத்தில் இன்று அரசுமுறை துக்கம் அனுசரிக்கப்படுகிறது.

மாநில அரசின் நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

அம்மாநிலத்தில் தேசியக்கொடிகள் இன்று அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் இதுவரை 80 பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் 33 பேரின் உடல்கள், உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் விமான விபத்து நடந்த இடத்தை பிரதமரின் முதன்மைச் செயலர் திரு. பி.கே. மிஸ்ரா நேற்று பார்வையிட்டார்.

அங்கு நடைபெற்று வரும் மீட்புப் பணிகள் குறித்து அவர் ஆய்வு மேற்கொண்டார்.

மருத்துவமனைக்கு நேரில் சென்று திரு. பி.கே. மிஸ்ரா தலைமையிலான குழு ஆய்வு செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டிற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

உலக காற்றாலை மின்சக்தி தினத்தை ஒட்டி, பெங்களூருவில் நடைபெற்ற புதுப்பிக்கத்தக் எரிசக்தி தொடர்பான மாநாட்டில் நேற்று பேசிய அவர், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி 17 புள்ளி ஒன்று மூன்று சதவீதம் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதில் காற்றாலை மின்உற்பத்தி மட்டும் 10 புள்ளி ஐந்து சதவீத வளர்ச்சியை கண்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சூரிய மின்சக்தி பயன்பாடும் அதிகரித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

2030ஆம் ஆண்டுக்குள் புதைபடிவம் அல்லாத மூலங்களில் இருந்து 50 சதவீத மின்திறனை எட்ட வேண்டும் என்ற இலக்குடன் இந்தியா செயல்வடுவதாக அவர் கூறினார்.

கடந்த 11 ஆண்டுகளில் இந்தியா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் உலக அளவில் மூன்றாவது பெரிய நாடாக உருவெடுத்துள்ளது என்றும் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<>>>>

அறிவியல் ஆராய்ச்சி மேம்பாட்டிற்காக மத்திய அரசு பல்வேறு முக்கிய முடிவுகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

நேற்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆராய்ச்சி நடவடிக்கைகளை எளிமைப்படுத்துவதற்கான சீர்திருத்தங்கள் தொடர்பான அறிவிப்பை வெளியிட்டார்.

கொள்முதல் நடவடிக்கைகள், நிதி செலவு உச்சவரம்புகள் போன்றவை தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களே முடிவெடுக்கும் வகையில் சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த சீர்திருத்தங்கள் தாமதங்களை தவிர்த்து அறிவியல் ஆராய்ச்சியின் வளர்ச்சியையும் விரைவுபடுத்தும் என்று திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

மகாராஷ்டிரா மாநிலத்தில் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம் இடிந்து விழுந்ததில் 4 பேர் உயிரிழந்தனர்.

புனே அருகே இந்திராயணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம் அதிக நீரோட்டம் காரணமாக இடிந்து விழுந்ததில் இந்த விபத்து ஏற்பட்டது.

இதில் 18 பேர் காயமடைந்தனர். மீட்கப்பட்டவர்ளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. கிரீஷ் மகாஜன் தெரிவித்துள்ளார்.

மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னவிஸ் அறிவித்துள்ளார்.

இந்த விபத்து குறித்து உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, மாநில முதலமைச்சரை தொடர்புகொண்டு விவரங்களைக் கேட்டறிந்தார்.

<<<<>>>>

நாட்டின் மேற்கு, வடமேற்கு பகுதிகளில் சில இடங்களில் இன்று அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களின் சில இடங்களின் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் மூத்த விஞ்ஞானி திரு. ஜனமணி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

கோவா, கர்நாடகா ஆகிய மாநிலங்களிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அவர் கூறினார்.

இதனிடையே மகாராஷ்டிராவில் கனமழை தொடர்பான சம்பவங்களால் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

தமிழகத்தில் 6 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கன மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, தென்காசி ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நீலகிரி மாவட்டத்திற்கு இன்று மிக கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<>>>>

அல்டிமேட் டேபிள் டென்னிஸ் போட்டியில் மும்பை அணி பட்டம் வென்றது.

அகமதாபாதில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் அந்த அணி 8-4 என்ற புள்ளிக் கணக்கில் ஜெய்ப்பூர் அணியை வென்றது.

-------------

தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் திருப்பூர் அணி திருச்சி அணியை வென்றது.

சேலத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் திருப்பூர் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சேலத்தில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் திருச்சி அணி – கோவை அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**